**செயற்பொறியாளர், (வே.பொ) கரூர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை : திரு.ஆர்.ராஜ்குமார், பி.இ.(விவ.), எம்.இ.,**

செயல்முறை ஆணை எண்.அ/205/2019 — நாள் : 02.05.2019.

பொருள் : பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப் பணி — தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் - தொகுதி 4-ல் அடங்கிய பணிகள் - 2015-2016ம் ஆண்டில் தற்காலிகமாக தட்டச்சர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டது - திருமதி.கா.தாமரைச்செல்வி அவர்களுக்கு தட்டச்சர் பணிநியமனம் வழங்கியது — பணியினை வரன்முறை செய்து ஆணையிடல் - குறித்து.

பார்வை :
1. செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் கடித எண்: 5643/PSD-A2/2017 நாள்: 05.10.2017.
2. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்: அநிபி3/97065/17, நாள்: 20.10.2017.
3. தலைமைப் பொறியாளர் (வே.பொ), சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்: அப3/38845/2017, நாள்: 30.10.2017.
4. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்: அ/2730/17, நாள்: 06.11.2017.
5. வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண்: MES3/159754/2017-1, நாள்: 30.01.2018.

-------

ஆணை:

பார்வை 1 மற்றும் 2-ல் காணும் கடிதங்களின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி 4-ல் அடங்கிய பணிகளில் 2015-16ம் ஆண்டு நேரடி நியமனம் மூலம் தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ் தற்காலிகமாக தட்டச்சர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திருமதி.கா.தாமரைச்செல்வி அவர்களுக்கு பார்வை 3-ல் காணும் செயல்முறை ஆணையினைத் தொடர்ந்து, பார்வை 4-ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி தட்டச்சராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு 09.11.2017 முற்பகல் முதல் உதவி செயற்பொறியாளர் (வே.பொ), கரூர் அலுவலகத்தில் தட்டச்சராக பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

திருமதி.கா.தாமரைச்செல்வி, தட்டச்சர் அவர்களின் பணிப்பதிவேடு மற்றும் பணி ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டது. இவர் பணிவரன்முறை காலத்தில் தற்செயல் விடுப்பு தவிர எவ்வித விடுப்பிலும் செல்லவில்லை என்பது அறியப்படுகிறது.

மேலும், பார்வை 5-ல்காணும் கடிதத்தின்படி தட்டச்சர் பணியினை சம்பந்தப்பட்ட பணி நியமனம் வழங்கிய அலுவலரே வரன்முறை செய்து உத்திரவு வழங்கலாம் என அனுமதி வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து திருமதி.கா.தாமரைச்செல்வி, தட்டச்சர் அவர்கள் முதன் முதலில் அரசுப் பணியில் சேர்ந்த நாளான **09.11.2017 முற்பகல் முதல் கீழ்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை** செய்து இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

" The regularisation is subject to the outcome of the W.P's pending on the files of the Hon"ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Group-IV Services 2015-16 recruitment".

இவருக்கு மூன்றாண்டு தொடர்பணிகாலத்தில் இரண்டாண்டு தகுதிகாண் பருவ காலமாக நிர்ணயம் செய்தும் ஆணையிடப்படுகிறது.

செயற்பொறியாளர்,
வேளாண்மைப் பொறியியல் துறை,
கரூர்.

02/05/19

பெறுநர்,
திருமதி.கா.தாமரைச்செல்வி, தட்டச்சர்.
உதவி செயற்பொறியாளர் (வே.பொ) அலுவலகம், கரூர்.

நகல் மற்றும் மூலம்: உதவி செயற்பொறியாளர் (வே.பொ) கரூர்.
இவ்வாணையில் தெரிவிக்கப்பட்ட விபரங்களை தனியரின் பணிப்பதிவேட்டில் பதிந்து அதன் விபரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவித்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகல்: தலைமைப் பொறியாளர் (வே.பொ), சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல்: கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ), திருச்சிராப்பள்ளி மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல்: பட்டியலுக்கு.

நகல்: பணிப்பதிவேடு

நகல்: இருப்புக்கோப்பு

உபரி: 1

வே.பொ.இ.1236/17 நாள் 11-5-2019

அனுப்பலாம்

Assistant Executive Engineer.
Agricultural Engineering Department
KARUR

15-5-2019

பெறுநர்
திருமதி. கா. தாமரை செல்வி.